සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

**44 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பின்வருவனவற்றுள் தொழுகையின் பர்ளுகளில் **அடங்காதது**
(1) ஸூரத்துல் பாதிஹா ஓதல் (2) கிப்லாவை முன்னோக்குதல்
(3) இஃதிதாலில் தரித்தல் (4) ஸுஜூத் செய்தல்
(5) முதலாம் சலாம் சொல்லுதல்

**2.** நபி (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் தங்களது இரகசிய அழைப்புப் பணியை மேற்கொண்ட இடம்
(1) தாருந் நத்வா (2) ஹிரா (3) தாருல் அர்கம் (4) தாயிப் (5) தார் அபீபக்ர்

**3.** வெள்ளிக்கிழமைகளில் ஓதுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட ஸூரா
(1) பாத்திஹா (2) யாஸீன் (3) முல்க் (4) கஹ்ப் (5) வாகிஆ

**4.** 'ஒரு சமுதாயத்தில் மருத்துவர்கள் சிலராவது இருக்க வேண்டும்' என்பது
(1) பர்ளு கிபாயா (2) ஸுன்னத் (3) முபாஹ் (4) பர்ளு ஐன் (5) வாஜிப்

**5.** கரையோரப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைத் தனது இராச்சியத்தில் குடியேற்றிய மன்னன்
(1) இரண்டாவது அக்கபோ (2) மானவம்ம
(3) மகா பராக்கிரமபாகு (4) மாயாதுன்னை
(5) இரண்டாம் இராஜசிங்கன்

**6.** 'ரித்தத்' என்ற பதம் குறிப்பது
(1) அல்லாஹ்வுக்கு இணை வைத்தல் (2) இஸ்லாத்திலிருந்து வெளியேறுதல்
(3) நயவஞ்சகம் (4) இறை நிராகரிப்பு
(5) நாஸ்திகம்

**7.** உஸூலுல் பிக்ஹ் தொடர்பான நூல்
(1) அல் உம்மு (2) இஹ்யா உலூமுத்தீன்
(3) அர் ரிஸாலா (4) அல் பிக்ஹுல் அக்பர்
(5) அல் மஜ்முஉ

**8.** தனது மனைவியைத் தாய்க்கு ஒப்பாக்குதல் மூலம் ஏற்படும் விவாக விலக்கு
(1) ஃலாஉ (2) ரஜஈ (3) லி ஆன் (4) லிஹார் (5) பாஇன்

**9.** பின்வருவனவற்றுள் உண்பதற்கு தடை **செய்யப்படாத** உணவு
(1) தானாக செத்த விலங்குகளின் மாமிசம்
(2) இரத்தம்
(3) தாக்கப்பட்டு இறந்த விலங்குகளின் மாமிசம்
(4) மிருகங்களின் கொம்பால் குத்தப்பட்டு இறந்த விலங்குகளின் மாமிசம்
(5) தப்ஹ் செய்யப்பட்ட பிராணிகளின் மாமிசம்

**10.** பின்வருவனற்றுள் தஸ்கியதுந் நப்ஸுடன் **தொடர்புபடாதது**
(1) தௌபா (2) தஹாரா (3) ஸுஹ்த் (4) வரஉ (5) மஹப்பா

[பக். 2 ஐப் பார்க்க

**11.** 'அல்-ஜிஹாத் பில் மால்' எனக் குறிப்பிடப்படுவதில் அடங்குவது
(1) போர்க்களத்தில் ஷஹீதாகுதல்
(2) இச்சையிலிருந்து உள்ளத்தைப் பாதுகாத்தல்
(3) நிர்க்கதியில் இருப்பவர்களுக்கு உதவி செய்தல்
(4) இஸ்லாமிய த.்.வாவில் ஈடுபடுதல்
(5) மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

**12.** இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு முபஸ்ஸிர்கள்
(1) ரஷீத் ரிழா, ஸுயூத்தி
(2) ஆயிஷா அப்துர்ரஹ்மான், ஸெய்யித் குத்ப்
(3) மௌதூதி, ஷொவ்கானி
(4) இப்னு கஸீர், ஷாஹ் அப்துல் காதிர்
(5) தந்தாவி, பக்ருத்தீன் ராஸி

**13.** பிக்ஹ், ஹதீஸ் கிரந்தங்களில் வித்தியாசமான சொற் பிரயோகங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 'முத்தபகுன் அலைஹி' என்பதனூடாக உணர்த்தப்படுவது என்ன ?
(1) இமாம் அபூஹனிபா, இமாம் மாலிக் ஆகிய இருவராலும் வழங்கப்பட்ட தீர்ப்புகள்
(2) இமாம்களான புகாரி, முஸ்லிம் ஆகிய இருவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹதீஸ்கள்
(3) இமாம் புகாரி, முஸ்லிம் ஆகியோரால் நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்கள்
(4) ஹதீஸ் குத்ஸி, ஹதீஸ் நபவீ ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுபவை
(5) இமாமம் ஷாபிஈ எகிப்திலும் பக்தாத்திலும் வழங்கிய தீர்ப்புகள்

**14.** ஸுன்னா ஒரு சட்ட மூலாதாரம் **அல்ல** எனக் கூறுவோர்
(1) பாஸிக்கள்
(2) முனாபிகுகள்
(3) முஸ்லிம்கள்
(4) காபிர்கள்
(5) முஷ்ரிகுகள்

**15.** பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்க.
A – இல்முத்தாரிக்
B – இல்மு ஜரஹ் வத்த.்.தீல்
C – இல்முல் பராஇள்
D – இல்மு அஸ்மா உர் ரிஜால்
E – உஸுலுல் ஹதீஸ்

மேலுள்ளவற்றுள் ஸுன்னாவைப் பாதுகாப்பதற்காகத் தோன்றிய கலைகளின் தொகுதி எது ?
(1) A B C (2) B C D (3) B C E (4) B D E (5) C D E

**16.** ஸிஹாஹ் ஸித்தாவில் அடங்கும் நூல்களின் தொகுதி
(1) புகாரி, முஸ்லிம், திர்மிதி, நஸாஈ, அபூதாவூத், இப்னு மாஜா
(2) புகாரி, முஸ்லிம், திர்மிதி, தாரமி, நஸாஈ, அபூதாவூத்
(3) புகாரி, முஸ்லிம், திர்மிதி, முஸ்னத் அஹ்மத், முவத்த.். மாலிக், இப்னு மாஜா
(4) புகாரி, முஸ்லிம், முவத்த.். மாலிக், திர்மிதி, தபரானீ, அபூதாவூத்
(5) புகாரி, முஸ்லிம், நஸாஈ, பைஹகீ, திர்மிதி, அபூதாவூத்

**17.** பின்வருவனவற்றுள் தரீகாவுடன் **தொடர்பற்ற** தொகுதி
(1) பாதினிய்யா, ஸெய்திய்யா, கதரிய்யா
(2) காதிரிய்யா, ஷாதுலிய்யா, நக்ஷ்பந்திய்யா
(3) பாஸிய்யா, அருஸிய்யா, அலவிய்யா
(4) ஸுஹ்ரவர்திய்யா, ஜிப்ரிய்யா, பாதிபிய்யா
(5) ஷெய்க், பைஅத், முரீத்

**18.** அல்-குர்ஆனின் விடயத்தில் முஸ்லிம்களுக்குள்ள கடமையில் **அடங்காதது**
(1) அல்-குர்ஆனை ஓதுதல்
(2) அல்-குர்ஆனை விளங்கிக் கொள்ளல்
(3) அல்-குர்ஆனைக் காட்சிப்படுத்தல்
(4) அல்-குர்ஆனின் வழியில் நடத்தல்
(5) அல்-குர்ஆனின் பால் அழைத்தல்

**19.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A – காஸிம் ஒரு பெண்ணைப் பார்த்துத் திருப்தியடைந்தார்.
B – திருமணம் செய்து கொள்வதற்குப் பொருத்தமான பெண்ணைத் தேடினார்.
C – வலீக்கும் காஸிமுக்குமிடையில் சாட்சிகளுடன் ஈஜாப் கபூல் இடம்பெற்றது.
D – தான் தேடிய பெண்ணின் தந்தையிடம் விண்ணப்பித்தார்.
E – காஸிம் மணம்முடிக்க விரும்பினார்.
F – மஹராகப் பெண்ணுக்கு ஒரு நகையை வழங்கினார்.
G – வலீமா விருந்தளித்து மகிழ்வை வெளிப்படுத்தினார்.
H – இரு வீட்டாருக்குமிடையில் திருமணப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

மேலுள்ள கூற்றுகளை விவாகம் ஒன்றின்போது நடைபெறும் விதத்தில் ஒழுங்குபடுத்தினால், அமையும் சரியான ஒழுங்கு முறை
(1) A E H B F C G D
(2) A B C H F G D E
(3) A B E D C H F G
(4) E B A D H F G C
(5) E B A D H C F G

[பக். 3 ஐப் பார்க்க

**20.** அல்-குர்ஆனைப் பதிவதிலும் தொகுப்பதிலும் தொடர்புபட்ட இருவர்
(1) ஸைத் பின் ஸாபித், அபூஹுரைரா
(2) அபூபக்ர், இப்னு உமர்
(3) உஸ்மான் இப்னு அப்பான், இப்னு மஸ்ஊத்
(4) உமர் இப்னுல் கத்தாப், இப்னு அப்பாஸ்
(5) ஸைத் பின் ஸாபித், முஆவியா

**21.** பின்வருவனவற்றுள் அல்-குர்ஆனுடன் **சம்பந்தப்படாதது**
(1) வஹீ மத்லுவ்வு (2) வஹி கைரு மத்லுவ்வு
(3) தர்தீப் நுஸூல் (4) தர்தீப் திலாவத்
(5) ஸபபுந்நுஸூல்

**22.** பின்வருவனவற்றின் கருத்துகளைக் கவனத்திற் கொள்க.
A – அல் அர்ஹாம் B – வக்பு
C – அல் ஹுஜ்ப் D – இல்முல் மீராஸ்
E – முஆமலாத் F – அஸ்ஹாபுல் புரூள்
G – அல் அஸபா
மேலுள்ளவற்றுள் வாரிசுரிமையுடன் தொடர்புடைய தொகுதி
(1) ABCDE (2) ABCDF (3) ACGDF (4) BCDEF (5) CDEFG

**23.** இஸ்லாமிய அகீதாவில் முரண்பட்டோர் உருவாவதற்கான காரணம் **அல்லாதது**
(1) அரசியல், சமூகவியல் தொடர்பான பிற கலாசாரங்களின் தாக்கம்
(2) இல்முல் கலாம், தத்துவஞானம் போன்ற கலைகளின் தோற்றம்
(3) தீர்வுகாண முடியாத விடயங்களில் பகுத்தறிவைப் பயன்படுத்தியமை
(4) அல்-குர்ஆன் ஸுன்னாவை ஸஹாபாக்கள் வழிநின்று அணுகியமை
(5) பிழையான கொள்கைகளைக் கொண்டிருந்த ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்த முனைந்தமை

**24.** இஸ்லாத்தில் இறைதூதர்கள், ஸஹாபாக்கள், ஸலபுஸ்ஸாலிஹீன்கள் போன்றோரைக் **கண்ணியப்படுத்தி**, அவர்களுக்காகப் பிரார்த்திக்கும்போது சொல்லப்படுவது
(1) ரழியல்லாஹு அன்ஹும் (2) அலைஹிமுஸ்ஸலாம்
(3) ஹபிழஹுமுல்லாஹ் (4) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
(5) ரஹிமஹுமுல்லாஹ்

**25.** பின்வரும் கூற்றுகளில் சரியானது எது ?
(1) ஸிப்பீன் யுத்தத்தில் அநேக ஸஹாபாக்கள் ஷஹீதானார்கள்.
(2) இமாம் மாதுருதியின் சிந்தனைகள் இமாம் அஷ் அரியின் கருத்துகளைச் சார்ந்தவையாகப் பெரும்பாலும் அமைந்தன.
(3) கோட்டே இராச்சியத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஆங்கிலேயரால் வெளியேற்றப்பட்டனர்.
(4) ஸஹாபா, தாபிஈன்கள் கால தப்ஸீர்கள், தப்ஸீர் ம.்.கூல் என அழைக்கப்பட்டன.
(5) பெரும்பாவம் செய்தோர் காபிர்கள் அல்லர் என கவாரிஜ்கள் வாதிட்டனர்.

**26.** மு.்.தஸிலா, அஷ்அரிய்யா கோட்பாடுகள் தொடர்பாகச் சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A – அல்-குர்ஆன் படைக்கப்பட்டது.
B – குன் என்ற வார்த்தை மூலம் அல்லாஹ் பிரபஞ்சத்தைப் படைத்தான்.
C – அல்லாஹ்வின் தாத்தும் ஸிபாத்தும் வெவ்வேறானவை.
D – மு.்.மீன்கள் மறுமையில் அல்லாஹ்வைக் காண்பார்கள்.
E – ஈமானுக்கும் குப்ருக்குமிடையில் மூன்றாவது நிலை ஒன்று உண்டு.
F – அஹ்லுத் தவ்ஹீத் வல் அத்ல்
மேலுள்ளவற்றுள் அஷ்அரிய்யா தொடர்பான கூற்றுகளைத் தெரிவுசெய்க.
(1) AB (2) BD (3) BF (4) CD (5) EF

- **27** தொடக்கம் **31** வரையுள்ள வினாக்களில் உள்ள சொற்களில் இரண்டு சொற்கள் மற்றிரு சொற்களுடன் ஏதாவதொரு வகையில் தொடர்பினைக் கொண்டுள்ளன. அவ்வாறான தொடர்பினைக் **கொண்டிராத** எஞ்சிய சொல்லைத் தெரிவுசெய்க.

**27.** (1) இல்முத்தப்ஸீர் (2) தப்ஸீர் மன்கூல் (3) முதவாதிர்
(4) கியாஸ் (5) இஸ்திஹ்ஸான்

**28.** (1) ஈஜாப் (2) கபூல் (3) முழாரபா
(4) அஸ்ஸலம் (5) முஷாரகா

**29.** (1) முஜ்தஹித் (2) முபஸ்ஸிர் (3) அபூஹனீபா
(4) அத்தபரீ (5) மஸ்ஊதி

[பக். 4 ஐப் பார்க்க

The National e-Learning Portal for The General Education

**30.** (1) ஸகரிய்யா (2) நூஹ் (3) ஹாருன் (4) யஹ்யா (5) மூஸா

**31.** (1) முஅல்லபதுல் குலூப் (2) ஹஜ் (3) உம்ரா (4) அறபா (5) ஸக்காத்

**32.** 'அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி வட்டியை ஹராமாக்கியுள்ளான்' என்ற கருத்துள்ள அல்-குர்ஆன் வசனம் அமைந்துள்ள ஸூறா

(1) பகறா (2) பாத்திஹா (3) அன்பால் (4) தௌபா (5) மாஇதா

**33.** பின்வருவனவற்றுள் கொடுக்கல் வாங்கலுடன் **தொடர்புடாதது**

(1) முராபஹா (2) முஷாரகா (3) முனாகஹாத் (4) முழாரபா (5) முஆமலாத்

**34.** ஆயிஷா (ரலி) அவர்கள் சிறப்பிடம் பெறுவது

(1) நபியவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் ஆகும்.
(2) அபூபக்கர் (ரலி) அவர்களின் மகளார் என்ற வகையில் ஆகும்.
(3) வஹியை எழுதுபவராக இருந்தமை என்ற வகையில் ஆகும்.
(4) அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர்களில் ஒருவர் என்ற வகையில் ஆகும்.
(5) நபியவர்களின் அன்புக்குரியவராக இருந்தவர் என்ற வகையில் ஆகும்.

**35.** நபி மூஸாவுடைய வாழ்வுடன் **தொடர்புபடாத** ஒன்று

(1) கைத்தடி (2) தூர்ஸீனா (3) செங்கடல் (4) நைல் நதி (5) நோய்களைக் குணப்படுத்தல்

● **36** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பனவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **36.** | வரஉ என்பது பேணுதலைக் குறிக்கும். | ஸுஹ்த் என்பது பற்றற்ற வாழ்வைக் குறிக்கும். |
| **37.** | இலங்கை முஸ்லிம்கள் வியாபாரத்திலும் கல்வியிலும் பின்தங்குவதற்கு ஆங்கிலேயர் காரணமாவர். | இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பான பல நூல்கள் இலங்கையில் அறிமுகமாகியிருந்தன என அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடுகின்றார். |
| **38.** | அடிப்படையில் எல்லாம் ஹராமானவையாகும். | ஷிர்க் செய்தவனை மறுமையில் அல்லாஹ் நாடினால் மன்னிப்பான். |
| **39.** | மதனிய்யா ஸூறாக்களில் சமூக மட்டத்திலான போதனைகள் வழங்கப்பட்டன. | சமூக, அரசியல், பொருளாதார விடயங்கள் தொடர்பான சட்டங்கள் மதீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்டன. |
| **40.** | இமாமத், கிலாபத் இரண்டும் ஒரே கருத்துடையவை. | இமாம்கள் மஃஸூம்கள் என்ற கருத்தை ஸுன்னத் வல் ஜமாஅத்தினரும் ஏற்பர். |
| **41.** | ஹராத்தில் விழுந்து விடுமோ என்ற பயத்தில் சந்தேகமானவற்றையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். | பர்ளை ஒதுக்கிவிட்டு ஸுன்னத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது சரியானதாகும். |
| **42.** | இஸ்லாம் ஆன்மீகத்தையும் உலகியலையும் இணைத்து பரந்த அமைப்பில் மனிதனுக்கு வழிகாட்டுகிறது. | குடும்ப வாழ்வும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் ஒரு இபாதத்தாகக் கொள்ளப்படும். |
| **43.** | மனிதன் செய்யும் பாவங்களை அல்லாஹ் தான் நாடினால் மன்னிப்பான். | 'ஹலால்', 'ஹராம்' என்பன பொருளீட்டலுடன் தொடர்பானவையாகும். |
| **44.** | ஜஸீரதுல் அரப் இலங்கைக்கு வடமேற்கில் உள்ளது. | அரபிகள் இலங்கையை ஜஸீரதுல்யாக்கூத் என அழைத்தனர். |
| **45.** | இஸ்லாம் அனுமதிக்கும் குறிப்பிட்ட வியாபார ஒழுங்குகள் உண்டு. | முழாரபா, முஷாரகா, முராபஹா முதலியன இஸ்லாம் கூறும் சில வியாபார ஒழுங்குகளாகும். |

The National e-Learning Portal for The General Education

[பக். 5 ஐப் பார்க்க

- **46** தொடக்கம் **50** வரையிலுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** என்னும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **X** நிரலில் உள்ளவை **Y** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுடன் சரியாகத் தொடர்புபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

**46.**

| X | Y |
|---|---|
| (i) நபகா | A – கோபால முதலியார் |
| (ii) அல் இத்ரிஸி | B – கிஸ்வா |
| (iii) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் | C – யாக்கூத் அல் ஹமவீ |
| (iv) ஹாஜி அபூ உஸ்மான் | D – சட்ட நிருபணச் சபை |
| (v) M. C. அப்துர் ரஹ்மான் | E – முதலாம் புவனேகபாகு |

(1) BCEDA (2) BCAED (3) BCEAD (4) BAEDC (5) CABED

**47.**

| X | Y |
|---|---|
| (i) தங்கம் | A – ஸுன்னத் |
| (ii) அவ்ரத் | B – பஸ்கு |
| (iii) வாஜிப் | C – பட்டு |
| (iv) குல்உ | D – ஹிஜாப் |
| (v) ரஜஈ | E – பாஇன் |

(1) ADCEB (2) CDABE (3) CADEB (4) CDEBA (5) CBDEA

**48.**

| X | Y |
|---|---|
| (i) ஹுதூத் | A – அல்-வகாலா |
| (ii) ரஹ்ன் | B – முபஸ்ஸல் |
| (iii) ஷிர்க் | C – ஹஸன் |
| (iv) முஜ்மல் | D – கிஸஸ் |
| (v) ஸஹீஹ் | E – குப்ர் |

(1) DABEC (2) DABCE (3) DAEBC (4) DEABC (5) EDABC

**49.**

| X | Y |
|---|---|
| (i) கிலாபத் | A – மாலிக் |
| (ii) த.'வத் | B – மதனி |
| (iii) மக்கி | C – மஸ்லஹா முர்ஸலா |
| (iv) உர்பு | D – அல் ஜிஹாத் பில் லிஸான் |
| (v) பிக்ஹு | E – இமாரத் |

(1) DEBCA (2) DCBEA (3) ECBDA (4) EDBCA (5) EDBAC

**50.**

| X | Y |
|---|---|
| (i) தஸவ்வுப் | A – காதிரிய்யா |
| (ii) தரீகா | B – மாது ருதிய்யா |
| (iii) அகீதா | C – தஸ்கிய்யா |
| (iv) நிஸாப் | D – தவாப் |
| (v) கல்க் | E – ஹவ்ல் |

(1) ACBED (2) ABCED (3) BACDE (4) CABDE (5) CABED

***

8989

AL/2014/44/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** (i) பிரதான இஸ்லாமிய மூலாதாரங்கள் **நான்கைக்** குறிப்பிடுக.
(ii) அவற்றுள் ஒரு மூலாதாரத்தைப் பற்றி விவரிக்குக.
(iii) மேலே (ii) இல் விவரித்த மூலாதாரம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதை விளக்குக.
(iv) அந்த மூலாதாரம் ஏனைய மூலாதாரங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

**2.** (i) இல்முல் அகீதா என்றால் என்ன ?
(ii) முரண்பாடான கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் கொண்டிருந்த முக்கிய அகீதா பிரிவுகள் யாவை ? சுருக்கமாக விளக்குக.
(iii) அகீதாவில் முரண்பாடுகள் தோன்றியமைக்கு ஏதுவான காரணங்களைக் குறிப்பிடுக.
(iv) ஸுன்னத் வல் ஜமா அத் அகீதா ஏனைய முரண்பட்ட அகீதாவிலிருந்து வேறுபடும் விதத்தினை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

**3.** பின்வரும் விடயங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(i) பிரபஞ்சம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்
(ii) அவ்ரத் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்
(iii) இஸ்லாத்தில் மனித உரிமைகள்
(iv) சேவைத் தொழில்களில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள்

## பகுதி II

**4.** (i) இஸ்லாமிய திருமணத்தின் பிரதான அம்சங்களை விளக்குக.
(ii) இஸ்லாம் பலதார மணத்தை அனுமதித்துள்ளதற்கான காரணங்களை எடுத்துக்காட்டி, விளக்குக.

**5.** நபி (ஸல்) அவர்களின் வாழ்வுடன் தொடர்புடைய பின்வரும் இரு நிகழ்வுகளிலுமிருந்து பெறப்படும் பாடங்களையும் படிப்பினைகளையும் விளக்குக.
(i) நபி (ஸல்) அவர்களின் மதீனா ஹிஜ்ரத்
(ii) ஹஜ்ஜதுல் விதா பிரசங்கம்

**6.** (i) "ரிஸாலத், ஹிதாயத் பெறுவதற்கான ஊடகம்" என்பதை எவ்வாறு நிறுவலாம் என்பதனை விவரிக்குக.
(ii) கத்முந் நுபுவ்வா கோட்பாட்டை நிறுவும் வகையில் ஆதாரங்களை முன்வைத்து விளக்குக.

**7.** (i) ஸகாத் கடமையாகும் பொருள்களையும் அளவுகளையும் விளக்குக.
(ii) ஸகாத் பெறத் தகுதியுடையவர்கள் யாவர் ? சுருக்கமாக விளக்குக.

**8.** (i) முஜ்தஹித்களின் தன்மைகள், தகைமைகள் தொடர்பாக விளக்குக.
(ii) பிரதான முஜ்தஹித்களின் பிக்ஹுத்துறைப் பங்களிப்பை விளக்குக.

* * *